# பாலியர் நேசன்.



நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௫ம் ௵. பங்குனி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை, ௯.

SUBSCRIPTIONS AND DONATIONS.

1865.

| | s. | d. |
|---|---|---|
| Mr. S. Massilamany | 4 | 0 |
| " M. E. Ponnampalam | 1 | 6 |
| " J. S. Mootootamby | 1 | 6 |
| " S. Marrimootoo | 1 | 6 |

## அறிவித்தல்,

இத்தமாதம் ௰௩ந் தேதி முன்னேரம் பத்துமணியளவில் பண்டத்தரிப்பு இளைஞர் கிறிஸ்த சங்கத்தின் அயனுந்தரக்கூட்டம் பண்டத்தரிப்பு மிசியோன் ஆலயத்தில் வைக்கப்படும். அத்தருணம் சகல இளைஞர்கிறிஸ்தசங்கத்தாரையும் பெற்றோரையும் சங்கத்தின் அனுசாரிகளையும் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு, எழுத்துக்காரியஸ்தன்,

பங்குனி ௴ ௧௨. நா. யோசேப்பு.

## கெட்ட குமாரன்.

சின்னத்தம்பி என்றொரு பிள்ளையாண்டானிருந்தான். அவனுக்கு வயசு ௰௯. அவன் துப்பரவற்றவனும் நீயனும் கந்தையணிந்தவனுமாகவிருந்தான். ஒருநாள் நல்லதம்பி என்பவன் இவனைத் தெருவிற்கண்டு இவனுடன் சம்பாஷித்து ஓய்வுநாட் பள்ளிக்கூடத்துக்கு வரவேண்டுமென்பதாக வற்புறுத்திப்பேசிச் சம்மதிக்கப்பண்ணினான். அடுத்த ஓய்வுநாள் நல்லதம்பியென்பவன் சின்னத்தம்பியையுங் கூட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குப்போய் உவாத்தியாரிடத்தில் இவனை ஒப்புவித்து இவன்பேர் சின்னத்தம்பியென்றான்.

உவாத்தியார் பிள்ளைகளிடத்தில் அவர்கள் பாடத்தைப்பற்றிக் கேள்விகேட்க, அவர்கள்சந்தோஷமாக மறுமொழி சொல்வதைச் சின்னத்தம்பி கண்டு மிகவுங் களிப்படைந்ததினால், தான் உடுத்திருப்பது வாத்தைக் கந்தைத் துணியென்பதை முற்றாகமறந்து தன்மனம் முழுவதையும் பாடத்திற் செலுத்தினான்.

பள்ளிக்கூடம் முடியும்போது உவாத்தியார் சின்னத்தம்பியைப் பார்த்து புதுப்பிள்ளைகளுடன் எப்பொழுதுந் தனித்துப்பேசுவது வாடிக்கை, ஆகையால் நீ அடுத்த வியாழக்கிழமை அந்திநேரத்தில் எனது வீட்டுக்குவா. அப்பொழுது பிள்ளைகளுடன் நீ நடந்துகொள்ள வேண்டிய விதங்களைப்பற்றி உன்னுடன் பேசுவேனென்றார். அதற்குச் சின்னத்தம்பி வருவேனென்று வாக்குப்பண்ணித் தனது வாக்குப்படி குறித்த தினத்தில் உவாத்தியாருடைய வீட்டுக்குவந்தான். உவாத்தியார் அவனுடைய சுவகாரியங்களை விசாரித்ததின்மேல் அவர் கண்டுபிடித்ததென்னவெனில், இவன் சிறுபையனாகவிருக்குங்காலத்தில் நடக்கவேண்டிய ஒழுங்குச்சட்டங்களை இவன் பிதா இவனுக்குச் சொல்ல, இவன்சம்மதியாமல் தனதிஷ்டப்படி பிதாவின் வீட்டைவிட்டுஅப்புறப்பட்டு துஷ்டனாய்ச் சீவித்ததாகக்கண்டார்.

உவாத்தியார் சின்னத்தம்பியைப்பார்த்து நீ பாலனாகவிருக்குங் காலத்தில் உன்னைப்பராமரித்ததார்? உன்பிதா உனக்குவேண்டியவைகளைக்கொடுத்து உன்னைக் காப்பாற்றவில்லையா? உனக்குப் பிரியமில்லாத கட்டளைச்சட்டத்தை உன்பிதா என் உனக்குச் சொன்னார்? உனது நன்மைக்காகவல்லவா? உன்னை ஒரு மனுஷனாக்கும்படிக்கல்லவா? இன்றைக்கு நீயிருக்கும் விதத்தை நினைத்துப்பார். நீ கந்தைச் சீலை உடுத்திருக்கிறாய். உன்னிடத்தில் யாதொரு நற்காரியமில்லை. உனக்கொரு சிநேகிதரில்லை. உன் காரியம் மெத்த மோசமாகவிருக்கிறது. நீ உன் பிதாவீட்டில் நின்று அவர் சொல்லியபடி செய்வாயாகில் இப்பொழுது மிகவும் வேற்றுமைப்பட்டவனாகக் காணப்படுவாய் என்று சொன்னபோது, சின்னத்தம்பிகேட்டு தான் இரக்கெட்டவனாய் விட்டேனேயென்று கதறி அழுதான். அப்பொழுது உவாத்தியார் அவனை நோக்கி, நீ நல்லவனாக வரக்கூடும். இப்பொழுதுதானே உன் பிதா வீட்டுக்குப்போய் அவருடைய கட்டளைக்கு அமையாததற்காகத் துக்கப்படுகிறேன் என்று சொல்லி அங்கே நிற்பாயாகில் அவர் உனக்கு மன்னிப்புத்தந்து உன்னை அங்கிகரித்துக் கொள்ளுவாரென்றார். அதற்குச் சின்னத்தம்பி நான் நல்லவனாக வருவது கூடாதகாரியம்; என்பிதாவும் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாரென்றான்.

அப்பொழுது உவாத்தியார் நல்லது, சின்னத்தம்பி இப்பொழுது நீயும் நானும் பேசினவைகளைக்குறித்து நீ தங்குமிடத்திற்போய்ச் சேர்ந்து சற்றுத் தியானித்துத் தேவனைநோக்கிப் பிரார்த்தி. மறுபடியும் வருகிற ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துக்கு வாவென்று சொல்லி அவனுடன் செபம்பண்ணி அவனை அனுப்பிவிட்டார்.

அடுத்த ஓய்வுநாள் சின்னத்தம்பி பள்ளிக்கூடத்துக்குப்போகவில்லை. அவன் விடுதிவிட்ட வீட்டில் நல்லதம்பிபோய்த்தேடியும் அவனைக் காணவில்லை. விடுதிக்காரியும் அவனைப்பற்றி ஒன்றும் அறியோமென்றாள். சிறிதுவாரங்கள் சென்றும் அவனைப்பற்றி ஒருவரும் ஒன்றுமறியவில்லை. ஆனால் ஒரு ஓய்வுநாள் அவன் முந்தின பள்ளிக்கூடத்துக்குப்போய் தன் வகுப்பில் உட்கார்ந்திருந்து நல்ல வஸ்திரந் தரித்துக்கொண்டு அலர்ந்த முகத்துடன் படிப்பதை உவாத்தியார்கண்டு உன்காரியம் என்னவென்று விசாரிக்க, அவன் சொன்னது, உமதுவீடுவிட்டவுடனே நீர் சொன்னவைகளைப்பற்றி என் விடுதியிற் படுத்திருந்தபோது சிந்தித்தேன். மறுநாட்காலமே நான் என்வீட்டுக்குப் புறப்பட்டுப்போனேன். போய்ச்சேரச்சிலநாட்சென்றன. என்பிதாவின் வாசலில் நின்றுகதவிற்தட்டினேன். அவர்கதவைத் திறந்தபொழுது முகாமுகமாய்அவரைக்கண்டுஎன்குற்றங்கள் எல்லாவற்றையுஞ்சொல்லி மன்னிப்புக்கேட்டேன். இனிநான் நல்லவனாக நடக்கப் பிரயாசப்படுவேனென்றபோது, அவர் என் குற்றங்களை மன்னித்து சந்தோஷமாக என்னைக்கட்டி முத்தமிட்டு எனக்கு நல்லவஸ்திரங்களைக் கொடுத்தாரென்றான்.

உவாத்தியார் அவனை நோக்கி, இப்பொழுது நீ நல்லவனா? என்க, இல்லை. நான அனேகதவறுகளைச் செய்கிறவனாகவிருக்கிறேன். ஆனால் நல்லவனாக நடக்கத் தெண்டிக்கிறேனென்றான்.

இக்கதையை வாசிக்கும் பிள்ளைகளில் எத்தனைபேர் சின்னத்தம்பியைப் போலொத்தவர்கள்? உங்கள் பரமபிதாவை நீங்கள் விட்டு அப்புறப்பட்டு இருக்கவில்லையா? சின்னத்தம்பியைப்போல நீங்களுந் திரும்பினால் தேவன் உங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

## துண்டுக்கயிறு.

ஒருமுடப்பையன் பட்சங் காட்டி நடந்தினை ஒரு துரைமகனிடம் வந்து ஐயா, தயவுபண்ணி ஒருதுண்டுக்கயிறு தாரும். தருகில் சற்று நீளமுள்ளதாகத் தாரும் என்றான். அதுஏன்? என்று துரைமகன் கேட்க, பையன் மறுமொழி சொல்ல மனமற்றவனாக நின்றான். ஆகிலும் ஈற்றில் ஐயா கயிற்றினால் கோவிக்கிளையைக் காக்கும் ஒரு வலையைப் பின்னி மூன்று பென்சாக விற்று அந்தப் பணத்தை அஞ்ஞானிகளுக்கென்று வேதாகமம் அச்சிடும் சங்கத்துக்கு அனுப்ப விரும்புகிறேன். அந்த மூன்று பென்சினால் ஒரு ஒற்றையின் ஒரு பக்கம் மாத்திரம் அச்சிடலாம் என்றான். அப்பொழுது துரைமகன் ஒரு பெரிய துண்டுக்கயிற்றை அவனுக்குக் கொடுத்துச் சொன்னதாவது, வலை பின்னிமுடிந்தவுடன் என்னிடங் கொண்டுவா என்றார். அப்படியே வலைமுடிந்தவுடன் பையன் துரைமகனிடங் கொண்டுபோக, துரைமகன அவனைப் பார்த்து நீ நல்ல பிள்ளை, இந்தா மூன்று பென்சு, இதை வேதாகமசங்கத்துக்கு அனுப்பு; இன்னும் ஒரு மூன்று பென்சு இந்தா, இதை நீ எடுத்துக்கொள் என்றார். அப்பொழுது பையன் எனக்கு வேண்டாம், எல்லாவற்றையும் சங்கத்துக்கு அனுப்பப் போகிறேன் இந்தப் பணத்தால் இரண்டுபக்கமும் அச்சிடலாமென்றான்.

## கிளிப்பிள்ளையின்சாட்சி.

ஒருமனுஷன்வளர்த்த கிளிப்பிள்ளை காணாமற்போயிற்று. அதை உடையவன் தேடிப் பின்னொருவனுடைய வசத்திலிருக்கக்கண்டு அதைக் கேட்டவிடத்தில் அவனில்லையென்று மறுத்துப்போட்டான். உடையவன் தனது கிளிப்பிள்ளையை இன்னான் வைத்திருக்கிறானென்பதாக நியாயஸ்தலத்தில் நாற்சிபண்ணினான். அப்பொழுது நியாயவிசாரணைக்காரர் உனது கிளிப்பிள்ளைதானென்பதற்கு எவ்வகையாக அத்தாட்சிபண்ணுவாயென்க, அந்தக் கிளிப்பிள்ளையே எனக்குச் சாட்சி, வேறேசாட்சியில்லையென்றான். கிளிப்பிள்ளை கூட்டுக்குள்ளிருக்கக் கூட்டைச் சீலையால் மூடி நியாயஸ்தலத்துக்குக் கொண்டுவரப்பட்டது. வழக்காளி கூட்டுக்குப் பக்கலில் தன் முகத்தைவைத்துக் கிளியைக் கொஞ்சும்படி சயிக்கைகாட்டினபொழுது அது மிகு அன்புடன் முத்தமிட்டது. அவ்

வேளையில் எதிரியானவன் கிளி எவரையும் முத்தமிடாதே. இதினாலது உன்னுடையதென்று சொல்லையா என்று சொல்லித் தன் முகத்தைக் கிளிக்கு நீட்டினவுடன் அது அவனுடைய உதட்டை இரத்தம்வடியத்தக்கதாகக் கொத்தி இழுத்தது. இதுகாரியத்தை நீதித்தலத்தார் கண்டு பிரமித்தார்கள். வழக்காளி கூட்டைத்திறந்து கிளிப்பிள்ளையைக் கையிலேந்திப் பலகேள்விகளைக் கேட்டபொழுது சகலரும் ஆச்சரியங்கொள்ளத்தக்கவிதமாகக் கிளிப்பிள்ளை மறுமொழிசொன்னதை நியாயாதிபதி கண்டு வழக்காளி கிளிப்பிள்ளையைப் பிடித்துக்கொள்ளவும் எதிரி வழக்காளிக்குச் செலவிறுக்கவுங் கட்டளையிட்டார்.

## பேனிக்கே.

இது சீரியாதேசத்திலுள்ள ஓர்மாகாணம். பெரியகடலின்கீழ்க்கரையோரமாய் அ௰ மைல் நீளமும், ௰உ மைல் அகலமுமுள்ள நெடுந்தேசம். இதற்குள் தீறு சீதோனின் தேசங்களும் அடங்கியிருந்தன. பேனிக்கேநாட்டார் கானான்தேசத்தாரின் சந்ததி. எங்கள் இரட்சகரின் நாட்களில் இத்தேசம் கிரேக்கதேசத்தாருக்குள்ளப்பட்டதாயிருந்தது. அதினால் தீறுவும் சீதோனும் கிரேக்கருடைய நகரங்களாக எண்ணப்பட்டன. யூதர் தங்கள்தேசத்தைத் தவிர்த்து மற்றத்தேசங்களெல்லாவற்றையும் கிரேக்கருக்குரியதென்றெண்ணினார்கள். தற்காலத்தில் பேனிக்கே துருக்க அரசாட்சிக்குட்பட்டதாயிருக்கிறது. இத்தேசமே வியாபாரத்துக்கு முதற்தேசமாக எண்ணப்பட்டது. இப்பொழுதும் நிலஞ்செழிப்பானதாயிருக்கிறது. சாலவைத்தானியங்களும் கனிவருக்கங்களும் அங்கிடத்திலுண்டு. சனங்களின் வாழ்வைத் துருக்கஅரசாட்சி நாசம்பண்ணிவருகிறது. காதேச் (Carthage) பேனிக்கேநாட்டாரால் குடியேறப்பட்டது. ஸ்பானியாதேசத்திலுள்ள காதீஸ் (Cadis) என்னும் நகரமும் கிறிஸ்துவுக்கு ஏறக்குறைய ஆயிரம்வருஷத்துக்குமுன் பேனிக்கேநாட்டாரால் குடியேறப்பட்டதென எண்ணுகிறார்கள்.

## தேவனுக்குக் கடன்கொடுத்தல்.

இரண்டுபிள்ளைகள் மூத்ததம்பியும் இளையதம்பியும் தங்கள் மாமனிடத்தில் ஆளுக்கு இரண்டு சிலின் வாங்கினார்கள்.

மூத்ததம்பி. இளையதம்பியைப்பார்த்து உனது பணத்தை என்னசெய்தாயென்று கேட்டான்.

இளையதம்பி. சொன்னது, பொன்னம்பலம் என்பவனுக்கு நான் வட்டிக்குக் கொடுத்துவிட்டேன். வட்டியோ கிழமைக்கு நாலுபென்னிச்சல்லி.

மூத்ததம்பி. அதற்கு என்னபொறுப்புப்பண்ணினான்?

இளையதம்பி. ஐந்துசிலின் பெறுமதியானஅவனுடைய புத்தகம் என்னிடத்திலிருக்கிறது. நல்லது மூத்ததம்பி, உன்பணத்தை என்னசெய்தாயென்றான்.

மூத்ததம்பி. ஒருசிலினைக் கடன்கொடுத்துவிட்டேன் மற்றச்சிலின் என்மடியிலிருக்கின்றது.

இளையதம்பி. ஆருக்குக் கடன்கொடுத்தாய்?

மூத்ததம்பி. நான் தேவனுக்குக் கடன்கொடுத்தேன்.

இளையதம்பி. தேவனுக்கு என்பணம்?

மூத்ததம்பி. அவருடைய சனங்களுக்குள் சில வறியோருண்டு. அவர்களுக்கு அது தேவை. மரியான்என்பவளுக்குஇந்தஅவதியானகாலத்தில்பணுட்டுவாங்கும்படி அவளுக்குக் கொடுத்தேன். இதையே நான் தேவனுக்குக் கடன்கொடுத்ததென்றுசொன்னது. "தரித்திரனுக்குத் தயைசெய்பவன் யெகோவாவுக்குக் கடன்கொடுக்கிறான்" என்று சத்தியவேதம் சொல்லுகின்றது.

## ஆடுகளைப் பெயர்பெயராக அழைத்தல்.

கிரேக்கதேசத்திலிருக்கிற ஒரு குருவானவர் "ஆடுகளும் அவனுடைய குரலுக்குச் செவிகொடுக்கின்றன. அவன் தன்னுடைய ஆடுகளைப் பெயர்பெயராக அழைத்து" என்ற வசனத்தின் உண்மையை அறியும்படி கிரேக்கதேசத்திலும் ஆடுகளுக்கும் பெயர்கொடுக்கிறதோவென்று தனது வேலைக்காரனிடத்தில் வினவினபொழுது, ஆம் ஆடுகளுக்குப் பெயர்கொடுக்கிறார்கள். அவைகளைக் கூப்பிடும்பொழுது அவைகள் கீழ்ப்படிகின்றன என்று சொன்னான்.

இதின் உண்மையை அறியும்படி ஒருநாட்காலமே ஆட்டுமந்தையின் பக்கத்திற்போய் இடையனிடத்தில் அந்தக் கேள்வியே கேட்டபொழுது அந்த மறுமொழியையே சொன்னான். அதின உண்மையைக் காட்டும்பொருட்டு மேய்த்துநிற்கும் ஒரு ஆட்டைப் பெயர்சொல்லிக் கூப்பிட உடனே அது தன் மேய்ச்சலைவிட்டு சந்தோஷத்துடன் துள்ளி ஓடி அவனிடஞ்சேர்ந்தது. அதை நான் கண்டபொழுது மிகவும் பிரமித்து இப்படிக்கொத்த தன்மையை மற்றும் மிருகங்களில் ஒருபொழுதுங் கண்டதில்லையென்றுணர்ந்தேன். அந்நியனுடைய குரலை அவைகள் கவனியாமற் பறந்தோடுவதையுங் கண்டேன். இடையன் மறுபடியும் அநேக ஆடுகள் இன்னும் தங்கள் பெயரை மட்டிட்டுக்கொள்ளவில்லை. காலம் செல்லசெல்ல அவைகள் கற்றுக்கொள்ளுங்கள். தங்கள் பெயரை மட்டிடாதவைகளைக் காட்டுக்குணமுள்ளவைகளென்றும் மட்டிட்டறிந்தவைகளைப் படித்தவைகளென்றும் சொல்லுகிறது வழப்பம் என்று எனக்குச் சொன்னான்.

பிள்ளைகளே, மிருகங்கள் இப்படித் தன்னை ஆதரித்துக் காப்பாற்றி வழிகாட்டும் இடையனுக்குக் கீழ்ப்படிகின்றதே. அறிவுள்ள சிருட்டிகளாகிய பிள்ளைகளும் மனிதரும் தங்களை மேய்த்துப் போஷிப்பிக்கும் பரம இடையனாகிய யேசுவுக்குக் கீழ்ப்படிவது அவசியமென்பதை உற்றுணருங்கள்.



## கரடி.

கரடிவகையிற் கருங்கரடி, புகர்நிறக் கரடி, கருமைகலந்த வெண்கரடி, வெள்ளைக்கரடி, என்ப பலவினமுண்டு. இவைகள் பருமத்திலும் நிறத்திலுமேயன்றி மற்றும்படிக்கு மெத்த வித்தியாசமிரா. கருமைகலந்த வெண்கரடியே மிகப்பெரியது. அது ஒன்பதடிநீளமும் ஆயிரம்இறாத்தல்பார நிறையுமுள்ளது என ஒருவர் சொல்லுகிறார். கரடி மிகவும் பொல்லாததும் வலிமையுமுள்ளதினால் ஐவாய்மிருகமென்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. இதைப்போல வல்லுயிரான மிருகம் வேறொன்றில்லை. ஒரு குண்டுடன் அதைக்கொல்லுதல் பிரயாசம். அப்படிக்கொல்லுகில் மூளையை அல்லது இரத்தாசயத்தை ஊடுருவும்படி சுடவேண்டும். இவ்விதமாகச்சுட்டாலும் சீக்கிரத்திற் சாகமாட்டாது. ஏனெனில் அதின் தலையின்பக்கத்திலுள்ள தசைநார்க்கட்டுகள் மிகப்பெலன்கொண்டவைகளும் கபாலஓட்டின் தடிப்பு மிக உரங்கொண்டதுமாயிருப்பதாலும், இரத்தாசயத்தைச் சூழ்ந்த விலாவெலும்புகளும் தசைநார்களும் அதிகம் வலுக்கொண்டவைகளும் உடம்பிலுள்ள மயிர்கள் படைபடையாக மூடியிருப்பதாலும் இலகுவாக ஒருகுண்டுடன் கொல்லுவது அரிது.

காயம்பட்ட கரடியைக் கத்தி, ஈட்டி முதலியவைகளினால் சருவிக்கொல்லும்படி போவது சீவமோசத்துக்கு ஏதுவாகும். இதைத் திருட்டாந்தப்படுத்த மெய்யாகநடந்த ஒரு சரித்திரத்தைச் சொல்லுகிறோம்.

வட அமெரிக்காவிலுள்ள உரொக்கி (Rocky) மலைகளில் கரடிவேட்டையாடும்படி இரண்டு துரைமக்களும் பின்னும் பலருங் கூடிப்போனார்கள். ஒருநாட் சாயந்தரத்தில் வள்ளத்தின் பின்னணியத்திலிருந்த சிலர் கருமைகலந்த வெண்கரடியொன்று வெளிநிலத்தில் ஏறக்குறைய நானூறு யார் தூரத்தில் படுத்திருக்கக்கண்டு முதற்றரவேட்டைக்காரராக ஆறுபேர் வள்ளத்தைவிட்டிறங்கி அதைக்கிட்டும்படி உயர்ந்த சார்பான நிலத்தின்பக்கலாகப் பதுங்கிப்போய் நூறுயார்தூரத்தில் நின்றார்கள். அப்பொழுது நாலுபேர் ஒரேமுறையில் தங்கள துப்பாக்கிகளை நீட்டிச்சுட்டார்கள். நாலுகுண்டுகளும் அதின்மேற்பட்டும் இரண்டு குண்டுகள் அதின் நுரைஈரலை ஊடுருவிப்பாய்ந்தன. காயங்கள் பட்டவுடன் ஆவென்றவாயுடன் கரடி துள்ளி உக்கிரத்துடன் வேட்டைக்காரரைச்சருவப்பாய்ந்தோடினது. சுடாமல் நின்ற மற்றிருவரும் தங்கள் துப்பாக்கிகளை நீட்டிச்சுட்டார்கள். ஒரு குண்டு தோட்பட்டையைப் பொறிப்பொறியாக நொருக்கிமுறித்தது. இதினால் அதின்கெதி சற்றே குறைந்தும் அவர்கள் தங்கள் துப்பாக்கிகளில் மருந்தும், குண்டும் போட்டிருக்குமுன் அவர்களை நெருக்கிக்கிட்டினதால் அவர்கள் ஆற்றைநோக்கி ஓட, இதோ பின்னேயென்றது போல அவர்களைத் தொடர்ந்தது. அவர்களிலிருவர் வள்ளத்திலேறிவிட மற்றநால்வரும் நாணலுக்குள்மறைந்து நின்று கூடியவளவு தங்கள் துப்பாக்கிகளில் குண்டிறக்கிச்சுட்டார்கள். பலமுறையும் அவர்கள் சுட்டாலும் அது உயிர்விடாமல் அதிமூர்க்கங்கொண்டது. ஈற்றில் அது மிகவும் அவர்களை நெருங்கிக்கிட்டினதால் தங்கள் துப்பாக்கிகளையும் எறிந்துவிட்டு ஆற்றில்விழுந்தோடினார்கள். கரடியுமோ விடாப்பிடியாக அவர்களைத்தொடர, கரையில் நின்ற ஒருவன் அதின் தலையை ஊடுருவச்சுட்டான். அப்பொழுது மூர்ச்சையாய் ஆற்றில்விழுந்து உயிர்விட்டது. அதைக் கரையிலிழுத்துச் சோதித்துப் பார்க்கையில் எட்டுக்குண்டுகள் அதின் தேகத்தை ஊடுருவிப்பாய்ந்திருக்கக் கண்டார்கள்.

பிள்ளைகளே, கரடிக்குப் பயப்படுவதிலும் பாவத்துக்குப் பயப்படுதலே உங்கள் கடமையென்றுணருங்கள்.

(இன்னும்வரும்.)

அருமையான பிள்ளைகளே,

முன்போனபத்திரிகையில் நான் உங்களுக்குச்சொன்னபடியே இலீசா யெசபேலுக்குத் தப்பி ஓடி வனத்தில் ஒரு மரத்தின்கீழ்ப் படுத்திருக்கையில் ஒரு தூதன் தன்னைத் தட்டிப்போசனம்பண்ண அழைப்பதைக் கேட்டார். உடனே கண்விழித்துப் பார்த்துத் தழலிலே சுடப்பட்ட அப்பமும் தலைமாட்டிலே ஒரு பாத்திரத்திற் சலமும் இருக்கக் கண்டார். அதைச் சாப்பிட்டுத் திரும்பவும் படுத்துக்கொண்டிருக்கையில் மறுபடியும் ஒரு தூதன் தன்னைத் தட்டி, எழுந்து போசனம்பண்ணு, உனக்குண்டாகும் பிரயாணம் வெகு தூரத்திற்கிருக்குமென்று சொல்லக்கேட்டார். அவ்விதமே இலீசா எழுந்து போசனம்பண்ணி, அந்த ஆகாரப் பெலத்தினால், நாற்பதுநாள் இரவும்பகலும் நடந்து தேவமலையாகிய ஓரேபைச் சேர்ந்தார். அவ்விடத்திற் தங்கினபோது தேவன் தரிசனையாகி மலையின் உச்சியிற் தமது சமுகத்தில் நிற்கச் சொன்னார். இலீசா அவ்விடத்தில் நிற்கும்போது கண்டதுங் கேட்டதுமான காட்சிகள் மிகவும் அதிசயமானவை. பிள்ளைகளே, நீங்கள் அவ்விதமே கேட்கவுங் காணவுங் கூடுமேயாகில் என்ன நினைப்பீர்கள். நம்மூரின் அறியாமை நிறைந்த சனங்கள் என்னுவதுபோல

அவைகளெல்லாம் பேயின் காட்சிகளென்று எண்ணிப் பயந்தோடுவீர்களாக்கும். இலீசாவோ உண்மையான தேவனைப் பின்பற்றினபடியால் அப்பேர்ப்பட்ட பதிமயக்கம் அவரிடம் இருக்கவில்லையென்பதைப் பின்னால் வரும் காரியத்தால் அறிந்துகொள்வீர்கள். உற்றுக் கேளுங்கள். முதல் இலீசாவின் முன்பாக யெகோவா கடந்துபோனார். அவருடைய சமுகத்திற் பெலத்த காற்றுண்டாய்ப் பருவதங்களைப் பிளந்து கன்மலைகளைத் துண்டுதுண்டாகத் தகர்த்தது. காற்றின்பின் பூமியதிர்ச்சியுண்டாயிற்று. அதன்பின் அக்கினி தோன்றிற்று. அக்கினிக்குப்பின் அமர்ந்த ஒரு மெல்லிய சத்தம் கேட்டது. மறுபடி இலீசாவே, நீ, இங்கே என்னசெய்கிறாயென்று ஒரு சத்தங் கேட்டது. அப்போ இலீசா, ௧ இராசா. ௧௯: ௧௦. வசனத்திற் சொல்லியிருக்கிறபடி சொன்னார். யெகோவா இலீசாவை நோக்கி, அசாவேல் என்பவனைச் சூரியருக்கிராசாவாகவும், யெகூ என்பவனை இஸ்ரவேலருக்கிராசாவாகவும், ஷாபாத்தின் புத்திரனாகிய இலீஷாவை, இலீசாவுக்குப் பிரதித்தீர்க்கதரிசியாகவும் அபிஷேகம்பண்ணும்படி சொன்னார். அதுவன்றி பாகாலின் தீர்க்கதரிசிகளின் சங்காரத்தைக் குறித்தும் இஸ்ரவேலில் பாகாலைக் கண்டு முழங்காலிடாதவர்களும் அவனை முத்தஞ்செய்யாதவர்களுமான ஏழாயிரம்பேரை என்னிமித்தம் இருக்கவிட்டேனென்றார். பாருங்கள் பிள்ளைகளே, இலீசா, யெசபேலின் கட்கத்துக்குத் தான்மாத்திரம் தப்பினேனென்று எண்ணினார். தேவனோ அதிசயமான பிரகாரம் தமது தீர்க்கதரிசிகளைப் பொல்லாதயெசபேலின் கோபத்துக்கு விலக்கி இரட்சித்தார். தேவனை நம்புகிறவர்கள் எல்லோருக்கும் இவ்விதமே அதிசெயமான இரட்சிப்புக் கிடைக்கும். இலீசா, யெகோவாவின் வாக்கின்படியே போய்ச் சொல்லப்பட்ட பேர்களுக்கு அபிஷேகம்பண்ணினார். ஷாபாத்தின் புத்திரனும், இலீசாவுக்குப் பிற்பாடு தீர்க்கதரிசியாக வரும்படி நியமிக்கப்பட்டவனுமாகிய இலீஷாவோ இந்த இலீசாவைப் பின்சென்று அவருக்குப் பணிவிடைசெய்தார். இவ்விதமே இலீசா தேவனுக்கு ஏற்றவராய் நடந்து காலவிட்டதின்பின் தேவன் அவரைத் தம்மிடமழைக்கச் சித்தமானார். இலீசாவும் அவருடைய சீஷப்பிள்ளையாகிய இலீஷாவுங்கூட்டிக்கொண்டு யோர்தானுக்கக்கரைபோனார்கள். அப்போ ஆற்றைக் கடந்துபோவதற்கு யாதொரு கட்டுமரம், வள்ளம், தோணிமுதலானவையிருக்கவில்லை. பின்னை அவர்கள் எப்படிக் கடந்துபோனார்களென்று நினைக்கிறீர்கள்?



மேலே நீங்கள் இந்தப் படத்திற் காண்கிறபடியே இலீசா தனது மேலங்கியினால் சலத்தை அடிக்க, முன்னே இஸ்ரவேலர் கடந்துபோகப் பிரிந்ததுபோலவே அப்போதும் பிரிந்தது. அவர்கள் கடந்துபோனார்கள். அப்போ இலீசா இலீஷாவை நோக்கி நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுமுன் உனக்கென்ன செய்யவேண்டும் கேளென்று சொல்ல, இலீஷா உம்மிடத்திலுள்ள ஆவி இருமடங்காய் எனக்குக்கிடைக்கவேண்டுமென்று சொன்னான். இலீசா உத்தரமாய் நீ கேட்டகாரியம் அரிது. நான் உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளப்படும்பொழுது நீ என்னைக்கண்டால் அது உனக்குக் கிடைக்கும். இல்லாவிட்டால் உனக்குக் கிடையாதென்றார். இவ்விதமே சம்பாஷித்து நடக்குபோகையில் ஒரு அக்கினி இரதமும், அக்கினிக்குதிரையும், தோன்றி அவர்களைப் பிரிவுபடுத்த, இலீசா சுழல்காற்றினாலே வானத்துக்கேறிப்போனார். இலீஷாவோ இலீசாசொன்னபடியே இலீசாவானத்து எடுக்கப்படுகையில் பார்த்துக்கொண்டு நின்றான்.

பிள்ளைகளே, இவ்விதமே சுபாவ மரணத்தை அடையாமல் மோட்சத்துக்கெடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் எத்தனைபேர்? அவர்கள் தங்கள் சுபாவமான சரீரத்துடனேதான் மோட்சஞ்சேர்ந்தார்களோ? நீங்கள் மரித்தபின் மோட்சத்தில் அவர்களைக் காண்பீர்களென்ற நம்பிக்கை உங்களுக்குண்டோ?

## அதிஉத்தமன்.

ஒரு குருவானவர் நெடுநாட்களின்பின் தான் முன் படிப்பித்ததும் போதித்ததுமான தனது தேசத்திற்சேர்ந்து, ஒருநாள் தேவாலயத்தில் பிரசங்கம்பண்ணினதின்பின் கோவிலுக்கடுத்த அறையில் உளுக்கார்ந்திருக்கையில், ஒரு கைம்பெண் அவ்வறையின் கதவைத்தட்டிக், குருவானவரே உம்முடன் சிறிது வார்த்தை பேசவேண்டுமென்றாள். நல்லதும், என்னவென்று கேட்க, கைம்பெண் நீர் என்னை அறிவீராவென்றாள். இல்லை, அறியேனென்க, யோவானை உமக்குத் தெரியாதாவென்க, அதற்கும் குருவானவர் இல்லையென்க, அவன் உமது ஒய்வுநாட்பள்ளிக்கூடத்திற் படித்தானே என்றுசொல்ல, அப்படியிருக்கக்கூடும், ஆனால் எனக்கு ஞாபகமில்லையென்றுசொல்ல, அதற்குக் கைம்பெண் ஐயாவே, என்னுடைய யோவான் உலகத்தில் அதியுத்தமன் என்றுசொல்ல, மெய்தான் அப்படியிருந்தும் எனக்கு ஞாபகமில்லையென்றுசொல்ல, இன்னும் கைம்பெண் எனது யோவான் உலகத்திலுள்ளவர்களெல்லாரிலும் அதியுத்தமயோவான். அவன் சரித்திரத்தை அறிவீரானால் நீரும் அப்படியே சொல்லுவீரென்றுசொல்லி அவன் வர்த்தமானங்களைச் சொல்லத்துவங்கினாள்.

குருவே, நீர் எங்களைவிட்டுப் பிரிந்ததின்மேல் எனது நாயகன் மரணமடைந்துவிட்டார். நாங்களுந் தரித்திரரானோம். மிடியினால் சாகவதுவாகவிருந்தோம். ஒருநாள் எனது மகன் யோவான் என்னைநோக்கித் தாயே, இவ்விடத்தில் எனக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வேலையுமில்லை, நாங்களுமோ சாக ஏதுவாயிருக்கிறோம். நான் கடல்மேற்போய் ஏதும் உழைத்துக்கொண்டு வருவதற்கு விடைதாரும் என்றான். அவனைவிட எனக்குச் சற்றும் மனமில்லை. காலமுமோ கொடுமையாகவும் அவனுமோ மெத்தநெருக்கிக் கேட்கிறதாகவுமிருந்ததினால் அவனைப் பிரியாவிடையுடன் முத்தமிட்டு அனுப்பினேன். அவன் சமீபத்திலுள்ள ஒரு துறைமுகத்திற் சேர்ந்து பலரிடமும் வேலைதேடியும் கிடையாததினால் ஊருக்குத் திரும்புவோமென்று யோசிக்கையில் ஒரு கப்பலின் முதலாளிபோவதைக்கண்டு ஐயா, உமதுகப்பலுக்கு ஒருபையன் வேண்டுமோ என்றான். ஆம், ஒரு பையனைத் தேடுகிறேன் என்றுசொல்ல, அப்படியானால் நான் வரட்டா என்றுகேட்க, நல்லது உனது நடக்கைப்பத்திரமெங்கேயென்று கப்பித்தான் கேட்டார். அப்பொழுது பையன் ஐயா, என்னை இவ்விடத்திலொருவரும் அறியமாட்டார்கள். எனதுகிராமத்திற் பலர் என்னை அறிவார்கள். அவ்விடத்தில் நான் நற்சாட்சிப்பத்திரம் பெறுவது எளிது. இது அந்நியதேசமாகவிருக்கிறது. நான் என்னசெய்ய என்று மிகுந்த துக்கத்துடனும் புலம்பலுடனும்சொன்னான். அதற்குக் கப்பித்தான் நற்சாட்சிப் பத்திரமின்றி உனக்கு வேலை கொடுக்கமாட்டேன் என்க, பையன் ஐயா, நான் மிகவும் உமக்குக் கீழ்ப்படிந்திருப்பேன். நீர் சொல்வதெல்லாவற்றையுஞ் செய்வேன் என்றான். அதற்குக் கப்பித்தான் கெடுகெட்டு! பையா, நீ சாட்சிப்பத்திரங் காட்டினாலன்றி உன்னை வேலையில் வைக்கமாட்டேன் என்க, யோவான் சற்றே நிதானித்து ஓய்வுநாட்பள்ளிக்கூடத்தில் இனாமாகக் கொடுக்கப்பட்ட தனது வேதாகமத்தை மடியிலிருந்தெடுத்து அதில் இன்னார் இன்னாருக்கு இன்னகாரியத்துக்காக உபகாரமாகக் கொடுக்கப்பட்டதென்றெழுதியிருப்பதைத் திறந்து கப்பித்தானுக்குக் காட்டி இது உமக்குத் திருத்தியாகுமாவென்று கேட்டான்.

அதைக் கப்பித்தான் வாங்கி ஓய்வுநாட் பள்ளிக்கூடத்தில் நன்னடையாக நடந்துகொண்டதற்காக இந்தப்புஸ்தகம் யோவான் என்பவனுக்கு உபகாரமாகக் கொடுக்கப்பட்டதென்றெழுதியிருப்பதை வாசித்து, ஆகா! செட்டு, இதுபோதும், வா, உனக்கு நான் வேலைதருகிறேனென்று கூட்டிக்கொண்டு கப்பலுக்குப் போய்விட்டார். அந்தக்கப்பல் சென்ற் பீற்றஸ்பேர்க்கு (St Petersburgh) க்குப் பாய்வலித்தோடினது. சற்றுத்தூரம் போனவுடன் கடுங்காற்றவீசிப் புயலுண்டானது. கப்பல் அக்கப்பாடுபட்டுத் தாழ ஏதுவாயிருந்தது. யோவான் தனது வேதாகமத்தை எடுத்துக்கொண்டு அந்நியத்தபயபக்தியுடன் உரத்தசத்தமாய் ௧௦௭ம் சங்கீதத்தை வாசித்தான். தன் முழுந்தாள்களை மடக்கித் தேவனைநோக்கிக் கூப்பிட்டான். அவன் செய்ததுபோலக் கப்பலிலுள்ளவர்கள் ஒவ்வொருத்தராய் தேவனைநோக்கி ஓலமிட்டார்கள். அவர்களப்படி ஓலமிடுகையில் யோவான் ௧௦௭ம் சங்கீதத்தை மறுபடியும் உரத்துவாசித்தான். தேவன் அவர்களுடைய ஒருமித்த பிரார்த்தனையைக் கேட்டு சகாயஞ் செய்தார். கப்பித்தான் யோவானைப்பார்த்துப் பிள்ளையே எனது கடைகாலத்தில் உன்னை எனது கப்பலிலேற்றினது எனக்குப் பெருப்பாக்கியம். உனது பிரார்த்தனை எனது கப்பலைக் காப்பாற்றினது. பீற்றஸ்பேர்க்கிலே சேரும்போது ஒருநாள் உனக்குப் பெருநாளாகக் கொடுப்பேனென்றான். அப்படியே சேர்ந்தவுடன் தன் வாக்கின்படி கப்பித்தான் யோவானுக்கு ஒருநாளை விளையாட்டுநாளாகக் கொடுத்தான். பிள்ளைகளுடைய வழக்க பழக்கத்தின்படி யோவானும் சக்கிரவர்த்தியின் அரமனையையும் மாளிகைகளையும் அரமனைக்குச்செல்லும் உத்தியோகஸ்தர்களையும் இரதங்களையும் பார்த்துப் பொழுதுபோக்கிக்கொண்டிருக்கையில் ஒரு இரதத்திலிருந்து அவன் பாதத்தடியில் ஒரு அத்தகடயம் விழுந்தது. யோவான் குனிந்தெடுத்துக்கொண்டு சாரதியைக் கூப்பிட அவன் அதைக் கவனியாமல் இரதத்தைச் செலுத்தினான். யோவான் கடயத்தையும் எடுத்துக் கப்பித்தானிடம் வந்தசமயத்தில் அவர் அவனைநோக்கி, நீ நல்லதிட்டசாலி. இது முழுவதும் வைரக்கல் பதித்திருக்கிறதென்றார். அதற்கு யோவான் இது என்னுடையதல்லவென்க, பின்னை உனக்கு எப்படிக்கிடைத்தது என்றான். போட்டுகிடக்க எடுத்தேன். உடையவனைக் கூப்பிட்டேன் அவன் நான்கூப்பிட்டதைக் கவனிக்கவில்லையென்றான். நீ செய்யவேண்டியதெல்லாம் செய்துபோட்டாய். இனி அது உன்னுடையதென்று கப்பித்தான் சொல்ல, இல்லை அது என்னுடையதல்லவென்றான். போ பைத்தியக்காரப்பிள்ளை அதை என்னிடத்தில்தா, லொண்டன் பட்டினத்துக்கு நாங்கள் போகும்பொழுது அதைவிற்றுப் பணமாக்கி உனக்குத்தருவேன் என்றுசொல்ல, மெய்தான் நீர் சொல்வது, ஆனாலும் அது என்னுடையதல்லவே. நாங்கள் திரும்பிப் போகையில் புயல்வந்தால் என்னசெய்வோமென்றான்.

ஆம் ஆம், இதை நான் சற்றும் நினைக்கவில்லையே என்று கப்பித்தான் சொல்லி இருவருந் தேண்டித்து உடையவனைக் கண்டுபிடித்துக் கடயத்தைக் கொடுத்தார்கள். துரைச்சானியும் அப்பிள்ளைக்கு உபகாரமாக நூறு பவுண் கொடுத்தாள். இதைக் கப்பித்தானுடைய சொற்படி தோலுக்குள் வைத்துத்தைத்துப் பத்திரமாக வைத்திருந்தான். கப்பலைவிட்டிறங்குகையில்

சற்பித்தாரும் அவனுக்கு அம் பவுன் உபகாரமாகக் கொடுத்தான்.

யோவான் எல்லையற்ற சந்தோஷத்துடன் தனது கிராமத்துக்குப்போய்த் தான் வசித்த குடிசையின் படலையிற்சேர்ந்து பார்க்கும்பொழுது தானும் தன் மாதாவும் கடந்த ஒற்றடிப்பாதை புல்லுக்களால் மூடப்பட்டிருப்பதையும் குடிசையின் சாளரங்கள் அடைக்கப்பட்டிருப்பதையும், சுற்றிலும் பாழடைந்திருப்பதையுங் கண்டு, மனங் கொதித்துத் தன் மாதா இறந்துவிட்டதென்று தீர்மானம்பண்ணிக்கொண்டு பாழடைந்த குடிசையை [illegible] பார்த்து இக்குமுக்கடைந்தவனாய் அழாமலும் பேசாமலும் நின்றான். அவ்வேளையில் அடுத்த வீட்டிலிருக்கும் ஒரு ஸ்திரிவந்து இது யோவானோ வென்று கேட்க அவன் ஒன்றும்பேசாமல் நின்றான். அப்பொழுது அவள் யோவானுடைய மனக்குறிப்பை அறிந்து யோவானே உன்தாய் சாகவில்லை யென்றாள். அப்பொழுது தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தான். என்தாய் எங்கேயென்றுகேட்க அவள் இன்ன விடத்திலிருக்கிறாளென்று சொல்ல, அவ்வளவுந்தானோ வென்று சொல்லிக் கண்ணீரையுந் துடைத்துக்கொண்டு அவ்விடஞ்சென்று கதவில்பெரியோர் தட்டுவதுபோல் தட்ட அதின்முதலாளி அல்லது வேறாரோ மேன்மக்கள்வந்துவிட்டாரோவென்றெண்ணி உள்ளிருந்த விசாரணைக்காரன் கதவைத் திறந்து குறுவிழிப்பார்வையுடன் என்னவென்று கேட்க, என் தாயைக் காணவேண்டும் என்றான். உன்தாய்! அதார் என்க, மரியாளென்று சொல்ல, உனக்கு என் அவளை என்றுசொல்ல, நான் அவளைத் தாபரிக்கவேண்டும் என்ன, நீயாதாபரிப்பது, என்ன பொடியா, என்று சொல்ல நான் ஒரு வர்த்தகன்; என்னிடத்திற் கனபணமுண்டு என் தாயை நான் தாபரிக்கவேண்டும் என்க, விசாரணைக்காரன் நீ போய் முதல் மஸ்திருத்துவிடம் உத்தரவுச் சீட்டுப் பெற்றுக்கொண்டு வாவென்க, என்ன உத்தரவு, என் தாயைவிடும் என்றான். யோவான் தன் மாதாவையுங் கூட்டிக்கொண்டுபோய் சௌக்கியமாக வாழ்ந்திருந்தான். தன் பிள்ளை அதி உத்தமன் என்று ஸ்திரி சொன்னது சரியே. இப்படி என் பிள்ளையைச் சொல்லும்படியாகவைத்தது நீ கொடுத்த சத்தியவேதபுஸ்தகந்தானென்று அறிக்கையிட்டான்.

பிள்ளைகளே யோவானென்பவன் பள்ளிக்கூடத்தில் ஒழுங்காக நடந்ததினால் எப்பெயர்ப்பட்டவனானானென்பதை இச்சரித்திரங் காட்டுகின்றதே. உங்கள் காரியங்கள் எப்படி. "ஒழுக்கம் உயர்குலத்து நன்று" என்பதைக்கவனித்தால் மேன்மக்களாவீர்கள்.

---

### சத்தியவேதக் கேள்வி.

௧. யேசுவானவர் பூமியிற் கடைசியாகப் புசித்த போசனம் என்ன? யோவா. ௨௧: ௧௨, ௰௩.

௨. அதை எவ்விடத்திற் புசித்தார்? யோவான். ௨௧: ௧.

௩. பஸ்காப் பண்டிகையின்பின் திராட்சரசம் பானம்பண்ணினாரா? மத். ௨௬: ௨௯.

௪. தமது சீஷப்பிள்ளைகளுக்கு அப்பொழுது அவர்பண்ணின வாக்குத்தத்தம்என்ன? மத். ௨௬: ௨௯.

௫. பண்டிகைக்குப்பின் அப்பம்பிட்டாரா? எவ்விடத்தில் பிட்டார்? லூக். ௨௪; ௩௰, ௩௫. அப்போ. ௰: ௪௧.

௬. ஆட்டுக்குட்டியின் விவாகத்தில் விருந்தாளராகவருபவர் யார்? வெளி. ௭: ௰௯—௰௭.

௭. இவ்விருந்து எவ்விடத்தில் கொண்டாடப்படும்? வெளி. ௰௯: ௧.

௮. இவ்விருந்தரை அழைப்பவர்கள் யார்? மாற்கு. ௰௬: ௰௫.

௯. நீயும் அழைக்கப்பட்டாயா? மத். ௨௨: ௩, ௯. நீயும் அழைக்கப்பட்டாயென்று சொல்லப்பட்ட இடம் எங்கே? வெளி. ௨௨, ௰௭.

பாலியர்நேசனுக்கு நித்தியத் திரவியம் பற்றியாய்த் தந்தனம்.

பாலியரே.

உங்களை உதரம் நாளாகக் கெர்ப்பத்திற் சுமந்து, பிரசவவேதனையுடன் பெற்று, அருமைப்பெருமையாய் உங்களுக்குப் பாலூட்டி, குரக்குக்குஞ்சு குட்டி பொன்குட்டியென்றுபோல செல்வமாய் வளர்த்தவரும் உங்கள் மாதாமாருக்கு நீங்கள் நன்கூரமல்லவா? உங்களைத் தொட்டிலிலாட்டி மார்பிலணைத்து, தாலாட்டுத் தாராட்டுப்பண்ணி, கண்வளரும்படி செய்து, அன்னேரம் உங்களுக்குக் காவலாகவிருந்த உங்கள் மாதாமாரும் உறங்க, உங்களுக்கு விக்கினம்வராமல் காப்பாற்றினவர் ஆர்? உங்களிற் சிலர் உங்கள் அருமையான மாதாவை இளமையிலிழந்து, தாயின் சுவையற்று இருக்க, தவிட்டையாகிலுந் தந்து, உங்களை வளர்க்கும்படியாக வேறும் ஒரு ஆளைத் தந்தவர் ஆர்? உங்களுக்குப் பிரசவவைகொடுத்த உங்கள் பிதாமாரிற் சிலர் நீங்கள் பாலகராயிருந்தவேளையில் பட்டுப்போக, மூவுலகமும் உங்களுக்கிருளாகியும் அந்நேரம் உங்களை வளர்க்கத்தக்க வெளிச்சந்தந்த பெருஞ் சோதி ஆர்? வலக்கண், வலக்கைபோற் றுணையாயிருந்த உங்கள் சகோதர சகோதரிகளிற் சிலர் விழுந்துபோயினும்சகோதரனிலும் விசேஷித்த உதவியை உங்களுக்குத் தந்தவர் ஆர்? வானசோதிகளாகிய பொன்மணிகளால் மூடப்பட்டிருக்கும் பூமி என்னுந் தொட்டிலிலிருக்கும் பாலியராகிய நீங்கள் சில வருடஞ்செல்ல, வாலிபராக வருவீர்களே! பாலியரே, ஒரு வாலிபன் தன் பாதைகளை எவ்விதமாய்க் காப்பான்? நீங்கள் வர்த்தக சாலையில் வைக்கப்பட்டிருக்கிற கூர்மையுள்ள ஓர் கட்கத்துக்கு நிகராகும் வயோதிபராகவும் வருவீர்களே. நீங்களோ இப்போ பெற்றோருக்கு விலைமதிக்கக்கரிய இரத்தினம். பெற்றோரையும் பெற்றவர்க்கு அழகு பொழியுங் கிரீடம். சாணைத்தண்டை வைக்கப்பட்ட கட்கத்தின் கூர்மையைப் பார்ப்போர் அது செய்துமுடித்தவைகள் யாது என்பதை அறியாரே. பாலியரே! மனுஷனே கட்கம்! அன்றுடக சீவியமே வேலைசெய்யும் பெரிய கம்மாலை! கம்மைப் படைத்துக் காப்பாற்றிவருகிற கடவுளே பெரிய கம்மாளன்! அதிகார விசார பார இச்சீவியக் கவலைகளே இக்கட்கத்தை உருவாக்கப் பெரிய கம்மாளன் பட்டடையில் வைத்து மோதிஅடிக்குஞ் சம்மட்டி! பாலியரே! இதை எட்டிப்பாருங்கள், மேலும், இச்சீவியம் எத்திறங்கொண்டு சித்திரந்தீர்ந்து உத்தமன் விற்பன்னன் கட்டும் ஓர் பெரிய மாடமாளிகைக்கு நிகராம். இந்தப் பெரிய மாடமாளிகையை எவ்வண்ணங் கட்டவேண்டுமென்பதைக் குறிக்கும் படம் அல்லது மால் இதைக் கட்டும் தனக்குவமையில்லாத சருவசாமார்த்திய அற்புத சிற்பாசாரியாகிய கடவுளிடத்தேயுளது. இந்த மாடமாளிகையைக் கட்டும் ஒப்பந்தகாரன மனுஷனே! இம்மாளிகையின் பாத்தியஸ்தனும் சிற்பாசாஸ்திர சுரோன்மணியுமாகிய கடவுள் கொடுத்த இம்மாளிகையின் படத்துக்கு அல்லது மாலுக்கு வேறான படத்தின்படி இம்மாளிகையை ஒப்பந்தகாரன் சமைப்பானாகில், ஐயோ! எத்தனை சாளரம் பிடுங்கப்படும். எத்தனை சுவர் இடிக்கப்படும். எத்தனை கதவுகள் அடைக்கப்படும். எத்தனை வாசல்கள் திறக்கப்படும். பாத்தியஸ்தனாகிய சிற்பாசாரிக்கும் ஒப்பந்தகாரனுக்கும் பெரியவாதுண்டாகுமே. எவ்வளவு பெரிய நட்டம்!

இச்சீவியத்தில் தேவன் வைத்த நிலைமையிலிராமலும் அவர் காட்டும் பாதையில் நடவாமலும் தங்கள் சித்தப்படி நடக்கிறவர்களின் முடிவும் இப்படி வருமென்பதை அறியுங்கள். மேலும் வில்லாச்சிரமோத்தமன் எனும் வில்லும் அம்பும் வைத்திருப்பான். ஒன்றின்றி ஒன்று உபயோகமற்றது. பாலியரே, மனுஷனே வில்லாச்சிரமி! அவனுக்குள்ளிருக்கிற வில்லும்அம்பும் எவை? எது இலக்குக் குறிக்க எது எய்கின்றது? மனுஷனுக்குள்ளிருந்து பட்சிகளைப்போற் பறப்பன யாவை? காடுகளி முதலிய இடங்களுக்கு நீங்கள் இராக்காலத்தில் விளக்குப் பிடித்துப் போம்பொழுது தெருவினிரு பக்கமும் வீடுகளும் வீடுகளுக்குச் சாளரவாயில்களுமிருக்கக் காண்பீர்கள். சில சாளரவாயில்கள் சுவரினடியிலும் சில சுவர் மத்தியிலும் சில ஆக அதிக உயரமாயும் வைத்துக் கட்டப்பட்டிருக்கும். சில வீடுகளுக்குச் சாளரவாயில்கள் ஒன்றுமில்லை. நீங்கள் அந்தந்தச் சாளரவாயில்கள் வைத்துக் கட்டப்பட்டிருக்கிற உயரத்துக்குத்தக்கதாகவே அந்தந்த வீட்டுக்குள்ளிருக்கிற தீப வெளிச்சங்களையும் காண்பீர்கள். அப்படியே அந்தந்த வீட்டுக்குள்ளிருப்போரும் தெருவீதியில் செல்லும் தீபவெளிச்சத்தையுங் காண்பார்கள். சில வீடுகளுக்குள் தீபவெளிச்சமில்லாமலுமிருக்கும். சிலர் தீபவெளிச்சமில்லாமலும் நடப்பார்கள். இவ்விரண்டும் அல்லது மூன்றும் மிகப் பரிதாபம். பாலியரே வீட்டுக்குள்ளிருக்கும் தீபவெளிச்சம் யாது? சாளரவாயில்கள் யாது? தெருவீதியில் தீபவெளிச்சம் யாது? என்பவைகளைச் சொல்லுங்கள். இவைகளினால் வரும் படிப்பினை யாது என்பதை அனுமானியுங்கள். மேலும் கண்ணுக்குத் தோற்றாத தரிசனப்பொருளாகிய வானசோதிகளைச் சோதிடசாஸ்திரிகள் தூரதிஷ்டிக்கண்ணாடி மூலமாகச் சமீபத்திற் காண்பார்கள். அதுபோல அதரிசனப்பொருள்களாகிய நித்தியவீடு பேரின்பப் பொருள் முதலியவைகளை மனுஷனுக்குச் சமீபத்திற் காட்டத்தக்கதாக மனுஷனிடத்துள்ள தூரதிஷ்டி யாது? இராக்காலத்தில் ஒருவன் தீபங்கொண்டு நடப்பானாகில் தானுந் தன்னுடன் நடப்போருஞ் சரியான பாதையில் மோசமின்றி நடக்கக் காண்பான். அதுபோல முத்திமார்க்கத்தில் நடக்கும் பிரயாணி தன் கையிற் பிடித்து நடக்கும் தீபம் யாது? உலகத்திலுள்ள எக்காளம் மணி முதலியவைகளின் தொனியைப் பார்க்கப் பெருந்தொனியுள்ளதாய்ப் பூமி அந்தரம் சுவர்க்கத்துக்கூடாகச்சென்று மோட்சவீட்டுக் கதவையுந் திறந்து தேவன் காதில் பெருந்தொனியுடன் கேட்கப்படும் சத்தம் ஆர் விடுங் கண்ணீர்? எங்கேயிருந்து எத்தருணத்தில்?

சுயாதீனத்துவ இரதத்தை இழுக்கப் பூட்டப்பட்ட கழுதைகள் யார்? மிருகங்களினாற் சேதப்படுத்தப்பட்டிருக்கிற ஓர் தோட்டத்துக்கு அல்லது ஓர் யுத்தகளத்துக்கு ஒப்பாகவிருக்கும் நூல் யாது? மிருகங்களுக்கொப்பானவர்கள் ஆர்? யுத்தகளமென்பதெதினால்? சத்தியவேதம் வைரரத்தினம் வைத்துக் கட்டப்பட்டிருக்கிற ஓர் கூட்டுக்குநிகர். கூட்டைவிட்டு வயிரரத்தினத்துக்கு நிகரான பெத்லேகேமின் பாலனை எடுத்துப்போட்டால் கூடு என்னபெறும். பாலியரே அப் பாலனார்? அவரை மூடி உடுத்தியிருந்த ஆடையாது? தேவன் தமது சிந்தனைகளையும் தாம் விரும்பியவைகளையும்எழுதும் நாளாகமப் பொர்த்தகம் யாது? ஆர் எழுதிவரும் நாளாகமம் பெரும்பாலும் பசாசு வைத்திருக்கும் மாயப்பெருழி? சிறுச் செபமாயினும் எவனாகுதல் நினைத்து நினைத்து ஒவ்வொரு சொல்லின் பொருளுந் தீர்க்கமாயுணர்ந்து சொல்லுங்கால் அவன் சீவியகாலம் முழுதுஞ் சொல்லத்தக்க பெருஞ் செபம் யாது? பாலியரே மனுஷர்யாவரும் அறியும்படி தேவன் கொடுத்திருக்கும் விலைமதித்தற்கரிய பத்து மணிகள் கோர்க்கப்பட்ட மாலை ஒன்றுண்டே. இம் மாலை கோர்க்கப்பட்டிருக்கிற வடமறுந்து ஒரு மணியை ஒருவன் இழந்துபோவானாகில் மற்ற ஒன்பதும் இழந்தான். அவ்வடம் யாது? இவைகள் யாதென விசாரித்தறிந்து கற்றதனால் ஆயபயனென்கொல் என்பதை நீவிர் உணர்ந்து வாலறிவன் நற்றாள்தொழும்படி பிரார்த்திக்கிறேன்.

John White.

கண்டி, ௲௮௱௬௰ ௵ தை மீ ௨௰௨.

---

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.